புரட்சிப்

# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • திசம்பர் (DECEMBER), 18 2025 • புரட்சி 25 • முழக்கம்(ISSUE) 50 • விலை(PRICE) ரூ.6.00


# ஜாதி வெறிக்கு முடிவுரை எழுத கோவையில் திரள்வோம்!

## தமிழ்நாடெங்கும் திராவிடர் விடுதலைக் கழகம் பரப்புரை

**திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், டிசம்பர் 29 அன்று கோவையில் ஜாதிய தீண்டாமைக்கு எதிரான மாபெரும் போராட்டம் நடைபெறவுள்ளது. இன்றைய நாகரீக உலகிலும் பல்வேறு வடிவங்களில் ஜாதியம் தலைதூக்கி நிற்கிறது. ஜாதிக் கயிறுகள், ஜாதிய குருபூஜைகள், ஜாதிய திருமண தகவல் மையங்கள், சமூக வலைதளங்களில் ஜாதி அடையாளத்தை வெட்கமின்றி ஒட்டிக்கொள்ளுதல் என ஜாதியை வலிமைப்படுத்தும் புதுவிதமான முயற்சிகள் முளைத்துக்கொண்டே இருக்கின்றன. ஜாதிச்சங்கங்கள் இந்த வேலைகளை இடைவிடாமல் செய்துகொண்டே இருக்கின்றன. இத்தகைய ஜாதி வெறிச்செயல்களால் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் தாழ்த்தப்பட்டோருக்கு நீதி கிடைப்பதையும் தடுக்க முயற்சிகள் நடக்கின்றன. இவற்றையெல்லாம் கண்டிப்பதுடன், ஜாதிய நடவடிக்கைகளுக்கான எதிரான அரசின் உறுதியான சட்ட நடவடிக்கைகளை வலியுறுத்தும் விதமாக, திராவிடர் விடுதலைக் கழகம் இந்த போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்திருக்கிறது. தமிழ்நாடெங்கும் போராட்டத்திற்கு கழகத் தோழர்கள் தயாராகி வருவதுடன், "மனிதம் நம் அடையாளம் ஜாதி நமக்கு அவமானம்"** என்ற தலைப்பிலே போராட்ட நோக்கத்தை விளக்கி, பரப்புரைப் பயணங்களையும் நடத்தி வருகின்றனர். அந்த செய்திகள் கீழே விரிவாக தரப்பட்டுள்ளன.

**ஈரோடு வடக்கு டிசம்பர்-7:** மாவட்டக் கழகத்தின் சார்பில் **"மனிதம் நம் அடையாளம் ஜாதி நமக்கு அவமானம்"** தெருமுனை பரப்புரைக் கூட்டம் டிச-7, 2025 ஞாயிறு மாலை 6 மணியளவில் பவானி ஒன்றியம் சித்தார் பகுதியில் நடைபெற்றது. (மாவட்டத் தலைவர்) நாத்திக ஜோதி தலைமை உரையாற்ற, கழகத்தின் (தலைமைக் கழகப் பேச்சாளர்) வேலுச்சாமி, (கழக வெளியீட்டுச் செயலாளர்) இராம. இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.




பெரியார், அம்பேத்கர் மற்றும் கழகத்தின் செயல்பாடுகள் குறித்த ஆவணப்படம் திரையிடப்பட்டது. பெருந்திரளான மக்கள் அதை கண்டு களித்தனர். நிகழ்வில் கலந்து கொண்ட தோழர்களுக்கு தி.க. மூத்த தோழர் ராமலிங்கம் தேநீர் வழங்கினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நாத்திக சோதி சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். நிகழ்வில் நிவாஸ், ஜெகநாதன், அருளானந்தம், துரை, மூர்த்தி, சின்னத்தம்பி, செல்வகுமார், ராமன், வினோத், ரகுநாதன், செல்வம் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**டிசம்பர்-14:** வாராந்திர தெருமுனைக் கூட்டம் டிச-14,2025 ஞாயிறு மாலை 6 மணி அளவில் அம்மாபேட்டை பகுதியில் நடைபெற்றது. (மாவட்டத் தலைவர் நாத்திக சோதி) தலைமை ஏற்க, (மாவட்டச் செயலாளர்) செல்வகுமார், (நாமக்கல் மாவட்டத் தலைவர்) சாமிநாதன், (பு.இ.மு) தைரியமணி, வழக்கறிஞர் சே குணசேகரன், மற்றும் திமுக அம்மாபேட்டை பேரூர் கழகச் செயலாளர் பெரியநாயகம் ஆகியோர் உரையாற்றினர்.

பெரியார், அம்பேத்கர், கழக செயல்பாடுகள் குறித்து குறும்படங்கள் திரையிடப்பட்டன. இக்கூட்டத்தில் தோழர்கள் ரமேஷ், நடராஜ், மயில்சாமி, துரை, சின்னத்தம்பி, வினோத், நிவாஸ், கோசனம் ராஜசேகர் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்ட தோழர்களுக்கு திமுக பொறுப்பாளர்கள் தேநீர் மற்றும் உணவு ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

**கோவை:** மாவட்டக் கழக்தின் சார்பில் டிசம்பர்-13, .2025 அன்று அன்னூர் சுற்றுவட்டாரத்தில் 4 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது. அன்னூர், மேட்டுப்பாளையம், காரமடை உள்ளிட்ட பகுதிகளில் முழுநாள் நிகழ்வாக பரப்புரை நடைபெற்றது.

**கரியாம்பாளையம்:** கரியாம்பாளையத்தில் அன்னூர் விஷ்ணு தலைமையில் நடைபெற்றது. முகில் ராசு, (மாவட்டத் தலைவர் - திருப்பூர் , நிர்மல் குமார் (மாநகரத் தலைவர் - கோவை) தம்பி செந்தில் (தமிழ்ப் புலிகள் கட்சி), அர்ஜுன் (இந்திய ஜனநாயக வாலிபர் கூட்டமைப்பு), வழக்கறிஞர் சண்முகநாதன் (த.பெ.தி.க), ஆறுச்சாமி (தி.மு.க), நவீன்குமார் (மாணவர் கழக அமைப்பாளர்) ஆகியோர் கருத்துரையாற்றினர் மனோரஞ்சனி நன்றி கூறினார்.



**கணேசபுரம்:** மோகன கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. : திருப்பூர் முத்து, (மாநகர அமைப்பாளர் - திருப்பூர்), அன்னூர் முருகேசன் (தமிழ்ப் புலிகள் கட்சி), பரிமளராசன் (சமூகவலைதளப் பொறுப்பாளர்), லோகநாயகி ஆகியோர் கருத்துரையாற்றினர். கூட்டத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு சமூக ஆர்வலர் அன்னூர் ஈஸ்வரன் மதிய உணவு ஏற்பாடு செய்தார். தி.மு.க. பரமேஸ்வரன் ரூ.200/- நன்கொடை வழங்கினார். தோழமை இயக்கத்தினர் திரளாக பங்கேற்றனர்.

**மேட்டுப்பாளையம்:** மேட்டுப்பாளையத்தில் நகர அமைப்பாளர் அமுல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. கழகப் பொருளாளர் சு.துரைசாமி, பா. இராமச்சந்திரன் (மாவட்டத் தலைவர் - கோவை), இக்பால் ( நகரச் செயலாளர் - ம.தி.மு.க.) முகில்ராசு ( மாவட்டத் தலைவர் - திருப்பூர்) ஆகியோர் கருத்துரையாற்றினர். வெங்கட் - நிர்மல் குமாரின் நய்யாண்டி நிகழ்ச்சி நடைபெற்றது. அன்னூர் விஷ்ணு நன்றி கூறினார்.

**காரமடை:** காரமடையில் நகர அமைப்பாளர் ஜெகதீஸ் தலைமையில் நடைபெற்றது. பரிமளராசன் (சமூகவலைதளப் பொறுப்பாளர்), திருப்பூர் முத்து, மாநகர அமைப்பாளர் - திருப்பூர் கனகராஜ், (சிபிஎம்), நிர்மல் குமார், (மாநகரத் தலைவர் - கோவை) ஆகியோர் கருத்துரையாற்றினர்.

**சென்னை:** டிசம்பர் 8,2025 அன்று மாலை 6 மணிக்கு, சென்னை மயிலாப்பூர் பல்லக்கு மாநகரில், ஆ.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) ஒருங்கிணைத்தார். தோழர்கள் வீரமணி - திராவிட மகிழன் ஆகியோர் பாடல்களைப் பாடினர்.

சாரநாத் (விசிக மய்ய சென்னை மாவட்டச் செயலாளர்), சிற்பி இராசன், U2BRUTUS மைனர், ஒருங்கிணைப்பாளர் புதுவை தீனா (பெரியார் சிந்தனையாளர் இயக்கம்), தேன்மொழி (திவிக IT WING) ஆகியோர் கருத்துரையாற்றினர். ரூ.1,025க்கு கழக வெளியீடுகள் விற்பனையாகின.



மா. வேழ வேந்தன் (தென்சென்னை மாவட்டத் தலைவர்), ம. கி. எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்), இராவணன் (மாவட்டத் துணைச் செயலாளர்), ப. அருண் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), வழக்கறிஞர் இரண்யா, கடலூர் சிவகுமார், சு. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), சே. ராஜேஷ் (பகுதிச் செயலாளர்), த.நா. சூர்யா (பகுதி அமைப்பாளர்), பேரன்பு (தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர்), முழக்கம் செய்தியாளர் பிரசாந்த், மயிலாப்பூர் பகுதித் தோழர்கள் மனோகர், சிவா, முழக்கம் உமாபதி, பிரவீன் மற்றும் பார்த்திபன், கவுதம் ஷாம் (Dravidian stock பதிப்பகம்), யாழினி, ஓவியா, ராஜன், குமார் உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.

## மக்கள் திரளில் நடைபெற்ற தாரமங்கலம் பொதுக்கூட்டம்!

திராவிடர் விடுதலைக் கழக சேலம் மாவட்ட இளைஞர் அணியின் சார்பில்.. "மனிதம் நமது அடையாளம்" "ஜாதி நமக்கு அவமானம்" பொதுக்கூட்டம் டிசம்பர் 14,2025 ஞாயிறு மாலை 5.00 மணிக்கு தாரமங்கலம் அண்ணாதிடல் (சின்னப்பம்பட்டி சாலை) பகுதியில் மக்கள் பேராதரவுடன் நடைபெற்றது.

சி.தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) தலைமை வகித்தார். (சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்) பிரபாகரன் வரவேற்புரை ஆற்றினார். கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்),டேவிட் (சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்), கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) , குடந்தை பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பறை இசை மற்றும் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. மூடநம்பிக்கைகளுக்கு எதிரான தோழர் சிற்பி ராசன் அவர்களின் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்வு பொதுமக்கள், பெண்கள் என அனைவரையும் கவனம் ஈர்க்கச் செய்து மிகுந்த வரவேற்பை பெற்றது.



பொதுக்கூட்டத்தில் கே.ஆர்.தோப்பூர் கண்ணன், (சேலம் மாநகரச் செயலாளர்), ஆனந்தி (இளம்பிள்ளை நகரச் செயலாளர்), மோகன்ராஜ், (சேலம் மாவட்ட இளைஞர் அணித் தலைவர்) ஏற்காடு தேவபிரகாஷ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில்.. மனுதர்ம சாஸ்திரத்தையும், வேதங்கள், புராணங்கள், இதிகாசங்களின் பொய் புரட்டுகளையும் இதனால் வரலாறு நெடுகிலும் பார்ப்பனர்கள் செய்த வரலாற்று துரோகத்தையும், திராவிட இயக்க வரலாறு குறித்தும், சமகால இந்திய அரசியல் சூழல் பற்றியும் மக்கள் மத்தியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் குறித்தும் ஆதாங்களுடன் விளக்கினார். பார்ப்பனர்கள் உயர் பதவிகளில் நீண்ட நெடுங்காலம் இருந்து வருவதற்கு மதங்களுக்கிடையிலான பிரச்சினைகளை உருவாக்கி விடுவது தான் காரணம் என்பது குறித்தும் எடுத்துரைத்தார்.

சிவசண்முகம் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) நன்றியுரையாற்றினார். இரவு உணவு அனைவருக்கும் அசைவ உணவாக வழங்கப்பட்டது.

சக்திவேல் (சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர்), சூரியகுமார் (சேலம் மேற்கு மாவட்டத் தலைவர்), ஏற்காடு பெருமாள் (சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர்), முத்துமாணிக்கம் (சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர்), பாலு (சேலம் மாநகரத் தலைவர்), மகேந்திரன் (ஆத்தூர் நகரத் தலைவர்), திவாகர் (மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) மற்றும் இளம்பிள்ளை, ஏற்காடு, சேலம் மாநகரம், ஆத்தூர், தாரமங்கலம், மேட்டூர், கொளத்தூர், வனவாசி, நங்கவள்ளி ஆகிய பகுதிகளில் இருந்து தோழர்கள் திரளாக சுமார் 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### தலையங்கம்

# மீண்டும் மீண்டும் கொல்லப்படும் காந்தி!

2005-ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், அன்றைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 100 நாட்கள் ஊரக வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இது வேலைவாய்ப்பு திட்டமாக இல்லாமல், சமூகப் பாதுகாப்புத் திட்டமாக மன்மோகன் சிங் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கும் கிராமப்புற மக்களுக்கு, ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்புகள் கிடைப்பதில்லை. அதனால் வேலைவாய்ப்பு கிடைக்காத காலங்களில், அவர்களிடத்தில் பணப்புழக்கம் இருப்பதை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதே இத்திட்டம்.

இந்தியா முழுவதும் பல கோடி மக்களை வறுமையில் இருந்த மீட்டது இந்தத் திட்டம். ஆனால் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு கடந்த 11 ஆண்டுகளாகவே வேலை நாட்களைக் குறைத்து, நிதியை விடுவிக்காமல், வேலை பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைத்து இத்திட்டத்தை பாழ்படுத்தி வருகிறது. 2013-14 நிதியாண்டில் ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்துக்கு ரூ.39 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், பாஜக ஆட்சி அமைந்த பின்பு 2014-15 நிதியாண்டில் ரூ.24 ஆயிரம் கோடியாக குறைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மொத்தம் 92 லட்சம் பேர் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு பதிவு செய்துள்ளனர். இதில் இந்த ஆண்டு 33,000 நபர்களை ஒன்றிய பாஜக அரசு நீக்கியுள்ளது. இதுவரை இந்தத் திட்டத்தில் பதிவு செய்தவர்களுக்கு வேலை ஒதுக்கீட்டை உள்ளூர் மட்டத்திலான அலுவலர்கள் செய்து வந்த நிலையில், இனி அதை டெல்லியிலிருந்து நிர்வகிக்கப் போகிறார்களாம்.

திட்டத்தை சிதைத்து பலவீனமாக்கிய பா.ஜ.க. அரசு இப்போது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்ற பெயரை மாற்ற முடிவெடுத்துவிட்டது. அதற்கான மசோதாவுக்கு ஒன்றிய அமைச்சரவை கடந்த 12-ஆம் தேதி ஒப்புதல் அளித்துள்ளது. இதையடுத்து, இத்திட்டத்தின் பெயரை விக்சித் பாரத் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்துக்கான உத்தரவாத திட்டம் (கிராமப்புறம்)- VB-G-RAM-G என்று மாற்றுவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசால் தாக்கல் செய்யப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இத்திட்டத்திற்கான நிதியை 100% ஒன்றிய அரசே வழங்கி வந்தது. ஆனால் இப்போதோ 60% நிதியை ஒன்றிய அரசும் மீதம் 40 % நிதியை மாநில அரசும் வழங்கும் என திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

காந்தியடிகளை கொலை செய்த இயக்கத்தின் வழிவந்தவர்களின் ஆட்சிக்கு இன்றும் அவரது பெயர் உறுத்துலைத் தருகிறது என்பதைத்தான் இது உணர்த்துகிறது. படுகொலை செய்யப்பட்ட காந்தியை மீண்டும் மீண்டும் கொலை செய்துகொண்டே இருக்கிறது இந்துத்துவ பரிவாரங்கள். பா.ஜ.க. ஆட்சியில் கடந்த சில ஆண்டுகளாக காந்தியடிகள் நினைவுநாளில், அவரது படத்தை சுட்டுப்பொசுக்கி, கோட்சேவைக் கொண்டாடும் காணொலிகளை வெளியிட்டு இந்துத்துவ அமைப்புகள் புளகாங்கிதம் அடைந்து கொண்டிருக்கின்றன. பிரதமர் மோடியே காந்தியின் நினைவிடத்திலும் மரியாதை செலுத்துவது, அவரை கொன்றொழித்த கோட்சேவின் படத்திற்கும் மாலை சூட்டி சிறப்பு செய்வது என ஒரே நாளில் இரட்டை வேடம் தரித்த கூத்துக்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. இத்தகைய இந்துத்துவா சிந்தனைகளின் தொடர்ச்சியாகத்தான் இப்போது, காந்தியின் பெயரை இல்லாமல் செய்வது என்ற இடத்திற்கு நகர்ந்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ரூபாய் தாள்களில் இருந்து காந்தி படத்தை நீக்க வேண்டுமென்ற குரல்களும் இந்துத்துவக் கூடாரத்தில் இருந்து அவ்வப்போது வந்துகொண்டுதான் இருக்கின்றன. காந்தி படத்தை மட்டும்தான் ரூபாய் தாள்களில் அச்சிட வேண்டுமா? வேறு தலைவர்களின் படங்களையும் அச்சிடலாமே என்று மெல்லிய குரல்களிலும் அவ்வப்போது அவர்களின் எண்ணத்தை வெளிப்படுத்தி விடுகிறார்கள். காந்தி இந்து- முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்தினார். காந்தியின் இந்த செயலால் இந்துக்கள் பெரிதும் பாதிப்படைந்தனர். இதனால் இந்த இந்திய தேசத்திற்காக காந்தியைக் கொன்றேன்' என்பதுதான் நாதுரேம் கோட்சேவின் வாதமாக இருந்தது. "காந்தி ஒரு கபடதாரி, முஸ்லிம்கள் இந்துக்களை கொலை செய்யும் போதும் அவர் மகிழ்ச்சியாக இருந்தார். எவ்வளவு இந்துக்கள் கொல்லப்பட்டனரோ, அவ்வளவு உயரம் அவரது மதச்சார்பின்மை கொடி பறந்தது" என 2000-ஆம் ஆண்டு டைம் இதழுக்கு பேட்டி தந்தார் நாதுராம் கோட்சேவின் சகோதரர் கோபால் கோட்சே.

தன் வாழ்வின் இறுதிக் காலத்தில் காந்தி இஸ்லாமியர்களை ஆதரித்தார் என்ற ஒற்றைக் காரணம்தான், அவரைக் கொல்லக் காரணமாக இருந்தது. இன்றுவரை மீண்டும் மீண்டும் அவரின் அடையாளத்தையும் அழித்தொழிக்க காரணமாக இருக்கிறது. காந்தியை இன்னும் எத்தனை முறை கொலை செய்தால் இந்த இந்துத்துவ வெறியர்களின் ஆத்திரம் நீங்கும் என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியுள்ளது.

“தலைமைத் தேர்தல் ஆணையர், இரண்டு தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் குழுவில் இருந்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி நீக்கப்பட்டது ஏன்?, குறிப்பிட்ட நபர்தான் தேர்தல் ஆணையராக வரவேண்டும் என்பதில் பிரதமர் நரேந்திர மோடியும், மத்திய உள்துறை அமைச்சரும் மிகுந்த ஆர்வம் காட்டுவது ஏன்? தேர்தல் ஆணையராகப் பதவியில் இருக்கும் போது மேற்கொள்ளும் தவறான நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணையர்கள் தண்டிக்கப்பட முடியாத வகையில் சட்டத்தில் மாற்றம் செய்து இதுவரை எந்தப் பிரதமரும் செய்யாத வரலாற்றை கடந்த 2023-ஆம் ஆண்டு டிசம்பரில் மத்திய அரசு செய்தது, தேர்தல் ஆணையர்களுக்கு இந்த அளவுக்கு சட்டப் பாதுகாப்பை பிரதமரும் மத்திய உள்துறை அமைச்சரும் அளித்தது ஏன்?” என்ற தேர்தல் ஆணையத்தின் மீதான 3 மிக முக்கியக் கேள்விகளை நாடாளுமன்றத்தில் ராகுல் காந்தி எழுப்பி, அது மிகப்பெரிய விவாதமாகிய நிலையில், அதனை மடைமாற்றத்தான் காந்தி பெயர் நீக்க நடவடிக்கையா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

# ராமர் கால வரலாறு திரும்பாது!

*மகளிர் உரிமை திட்டத்தை ஒரு கோடியே 30 லட்சம் பெண்களுக்கு விரிவுப்படுத்தி இருக்கிறது திராவிட மாடல் ஆட்சி. உணர்வு பூர்வமாக நடந்து முடிந்துள்ள "வெல்லும் தமிழ் பெண்கள்" விழாவில் பெண்களின் அடையாளமாக கும்மியும் கோலாட்டமும் இல்லாமல் வீரத்தையும் விளையாட்டையும் முன்னிறுத்தி பயனாளிகளின் நெகிழ்வான உரைகளோடு நடந்து முடிந்திருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியின் பெண்கள் உரிமைத் திட்டங்களை இப்போது 10 மாநில அரசுகள் பின்பற்றத் தொடங்கி இருக்கின்றன. இதில் பாஜக ஆளும் மாநிலங்களும் உண்டு.*

*சனாதனமும் மனுதர்மமும் பார்ப்பனியமும் ஒரே நேர்கோட்டில்தான் பயணிக்கின்றன. இதற்கான அரசியல் வடிவம்தான் இந்துத்துவம். இந்துத்துவக் கருத்துகளை வழங்கிய பார்ப்பனர்கள், சாவர்க்கரும் கோல்வாக்கரும். பார்ப்பனிய மேலாதிக்கத்தை நிலை நிறுத்தும் வர்ணாசிரம சமூக அமைப்பை வலிமையாக ஆதரித்தவர்கள்.*

*வர்ணாசிரமம் பெண்களை அடிமையாக்கியது; பார்ப்பனப் பெண்களாக இருந்தாலும் அவர்கள் பிராமணர்களாக முடியாது; பூணூல் போட முடியாது; சூத்திரர்கள் தான் என்று பறைசாற்றியது. கல்வி உரிமையையும், சொத்து உரிமையையும் மறுத்தது. அதன் காரணமாகத்தான் இன்று வரை ஆர்.எஸ். எஸ் அமைப்பில் பெண்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவது இல்லை.*

*பெண்கள் முன்னேற்றத்திற்கான ஒவ்வொரு திட்டமும் சனாதனத்தின் மீதும் பார்ப்பனியத்தின் மீதும் விழுகிற மரண அடி இந்துத்துவ அரசியலின் தோல்வி வர்ணாசிரம கட்டமைப்பை சீர்குலைக்கும் சமூக நீதித் திட்டமான இட ஒதுக்கீட்டுக் கொள்கையை வெளிப்படையாக எதிர்க்க முடியாமல் திணறுகிறது இந்துத்துவ அரசியல்.*

*அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்பை ஏற்று ஜாதி சங்கங்களை தடை செய்திருக்கிறது உ.பி மாநில பாஜக ஆட்சி. பார்ப்பனியம் மனுநீதி வழியில் சமூகத்தில் திணித்த குழந்தைகள் திருமணம் எனும் கொடுமையை எதிர்த்து ராஜஸ்தான் மாநிலத்தில் 100 நாள் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி வருகிறது பாஜக ஆட்சி. அதிக குழந்தைகளைப் பெற்று இந்துக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ். கொள்கையை நிராகரித்து இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருந்தால் அரசு வேலை இல்லை; தேர்தலில் போட்டியிட முடியாது என்று சட்டம் இயற்றி இருக்கிறது. அசாம் மாநிலத்தில் நடக்கும் ஹிமாஸ்பிஸ்வானின் பாஜக ஆட்சி வளர்ச்சி நோக்கிய சமூகப் போக்கில் காலாவதியாகி வருகிறது.*

*இந்துத்துவா சனாதன வர்ணாசிரமக் கொள்கைகள் திராவிட மாடல் ஆட்சியின் மகளிர் உரிமைத் திட்டம்தான், தங்களைக் காப்பாற்றும் என்று, கடைசி நேரத்தில் பெண்களுக்கு மாதம் பத்தாயிரம் ரூபாய் வழங்குவதாக அறிவித்து ஆட்சியைப் பிடித்தது பீகாரில் பாஜக அணி. இஸ்லாமிய எதிர்ப்பு, கிருத்துவ எதிர்ப்பு, நேரு எதிர்ப்பு என்று வெறுப்பு அரசியலை வைத்து இந்துத்துவ அரசியலைக் காப்பாற்றத் துடிக்கிறது மோடி ஆட்சி. உறுதியாகக் கூறுவோம்: வரலாற்றை ராமர் காலத்துக்கு இழுத்துச் செல்ல முடியாது.*

# சமூகநீதிக் கொள்கையில் உறுதிகாட்டும் ராகுல் காந்தி!

*பார்ப்பனர்கள் மற்றும் உயர் ஜாதி அதிகாரிகளின் பிடியில்தான் இந்தியாவின் ஆட்சி அதிகாரம் மய்யம் சிக்கிக் கிடக்கிறது. முடிவு எடுக்கும் அதிகாரம் படைத்த பதவிகளில் அனைத்துப் பிரிவு மக்களும் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார் ராகுல் காந்தி.*

*கடந்த புதன்கிழமை டெல்லியில் ஒரு முக்கிய கூட்டம் நடந்துள்ளது. பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி ஆகியோர் இடம் பெற்ற குழுவின் கூட்டம். தலைமை தகவல் ஆணையர், கண்காணிப்பு ஆணையர் மற்றும் 8 தகவல் ஆணையர்களை தேர்வு செய்வதற்காக இந்த குழு கூடியது.*

*தகவல் தொடர்பு ஆணையர் பதவி 2023-ஆம் ஆண்டில் இருந்தும் தலைமை ஆணையர்கள் பதவி கடந்த செப்டம்பரில் இருந்தும் நிரப்பப்படாமல் காலியாகவே இருக்கிறது. இந்தப் பதவிகளுக்கு மோடியும் அமித் ஷாவும் தேர்வு செய்துள்ள பட்டியல்களில் பார்ப்பனர்களே அதிகம்.*

*90 நிமிடம் நடந்த இந்த கூட்டத்தில் ராகுல் காந்தி இந்த பட்டியலில் ஏன் பட்டியலின, பிற்படுத்தப்பட்ட, மைனாரிட்டி பிரிவினர்கள் இடம் பெறவில்லை என்ற கேள்வியை முன்வைத்தார். விளிம்பு நிலை மக்களின் புறக்கணிப்பு திட்டமிட்டு அமைப்பு ரீதியாக நடத்தப்படுகிறது என்று நேரடியாக குற்றம்சாட்டினார். ஆடிப்போன அமித் ஷாவும் மோடியும் வாய் பேசவில்லை.*

*இந்தக் கூட்டம் கூடுவதற்கு சில வாரங்களுக்கு முன்பே தேர்வு செய்யப்பட்ட பட்டியல்களின் பெயர்களை கேட்டு வாங்கி அவர்களின் ஜாதிய பின்புலத்தை ராகுல் காந்தி விசாரித்து அறிந்த பிறகுதான், இந்த கூட்டத்திற்கு வந்தார் என்று 'இந்துஸ்தான் டைம்ஸ் 'நாளேடு செய்தி வெளியிட்டிருக்கிறது. தகவல் உரிமைச் சட்டம் 12(3) பிரிவு தேர்வுக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவரையும் ஓர் உறுப்பினர். இந்த சட்டம் பாஜக ஆட்சிக்கு வருவதற்கு முன்பே உருவாக்கப்பட்டது. அதனால்தான் இந்த வாய்ப்பும் கிடைத்தது.*

*விளிம்பு நிலை மக்களைப் புறக்கணிக்கும் இந்த பட்டியலில் தனக்கு உடன்பாடு இல்லை என்பதை எழுத்துப்பூர்வமாக ராகுல் காந்தி பதிவு செய்தார். கண் துடைப்புக்காக ஒரே ஒரு பட்டியலின பிரிவு அதிகாரி பெயர் மட்டும் இடம்பெற்றிருந்தது.*

*ஏற்கெனவே தேர்தல் ஆணையர் மற்றும் மனித உரிமை ஆணையர்களைத் தேர்வு செய்த இரண்டு கூட்டங்களிலும் பார்ப்பனர்களையே நியமித்ததை எதிர்த்து தனது எதிர்ப்பை இதேபோல் ராகுல் காந்தி எழுத்து மூலம் பதிவு செய்தார் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். இனி இந்த சட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இடம்பெறுவதை நீக்கி சட்டத் திருத்தம் கொண்டு வரவும் வாய்ப்பு இருக்கிறது. நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு ஊடகத்துறையிலும் உயர் அதிகார வர்க்கத்திலும் பார்ப்பன மேலாதிக்கத்தை கேள்வி கேட்டவர்தான் ராகுல் காந்தி.*

*தேர்தல் தோல்விகளைப் புறந்தள்ளி- சமூகநீதிக் கொள்கையில் உறுதியோடு நடை போடுகிறார் ராகுல். பார்ப்பன கூடாரமாக இருந்த காங்கிரஸ் வகுப்பு வாரி உரிமையை மறுத்தபோது பெரியார் அக்கட்சியில் இருந்து வெளியேறினார். அதே காங்கிரஸ் கட்சியின் தலைமை பெரியார் பேசிய வகுப்புரிமைக்கு அழுத்தமாக குரல் கொடுக்கிறது ; இது பெரியாரியத்தின் மகத்தான வெற்றி! ராகுல் காந்தி இந்திய அரசியலில் முன்னெடுக்கும் இந்த சமூக நீதிப் போராட்டத்திற்கு உறுதியாக துணை நிற்போம்.*

**- விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு**

# ஜீவாவும் மொழி வழி மாநில சீரமைப்பும்

## ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் (7) - கொளத்தூர் மணி

தோழர் ஜீவா அவர்களின் வாழ்க்கை வரலாறுகளை பலர் எழுதி இருந்தாலும் 1946-இல் வெளிவந்த தோழர் இஸ்மத் பாஷா எழுதிய ‘ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு’ மட்டும் அவர் வாழ்ந்த காலத்தில் வெளிவந்த ஒன்றாகும். 1963 ஜனவரியில் முடிவெய்திய தோழர் ஜீவா குறித்து, ‘ஜீவா வாழ்க்கை வரலாறு’ என்ற நூல் 1966-ஆம் ஆண்டு ஜனவரியில் நிகழ்ந்த அவரது சிலை திறப்பு விழாவில் வெளியிடப்பட்டிருந்தாலும் நூலினை எழுதிய தோழர் கே.பாலதண்டாயுதம் இறுதிக்காலத்தில் ஜீவாவோடு நெருக்கமாக இருந்த ஒருவர் ஆவார். அதில் பதியப்பட்டுள்ள செய்திகள் பெரும்பாலும் ஜீவாவிடம் நேரில் கேட்டு அறிந்து கொண்டதாகவும், ஏற்கெனவே அறிந்ததை உறுதிப்படுத்திக் கொண்டதாகவும்தான் இருக்க முடியும்.

அதில் மொழி வழி மாநிலங்கள் உருவான காலத்தில் வட எல்லையிலும் சென்னை குறித்தும் தெற்கெல்லைப் போராட்டம் குறித்தும் பதிவாகியுள்ள நிகழ்வுகளின் பற்றிய உண்மைத் தன்மையைக் குறித்து திறனாய்வு செய்ய வேண்டியுள்ளது.

அந்நூலின் 72 ஆம் பக்கத்தில் உள்ள “தேவிகுளம், பீர்மேடு தமிழகத்துடன் இணைய 1949-இல் அப்பகுதியில் போராட்டம் நடைபெற்ற காலகட்டத்தில் ஜீவா தலைமறைவில் இருப்பினும் பல்வேறு தலைவர்களுடன் ரகசியமாக தொடர்புகொண்டு அறப்போராட்டத்திற்கு சர்வ கட்சி ஆதரவை திரட்டினார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### குமரிப் போராட்டம்!

தோழர் பொன்னீலன் அவர்களால் எழுதப்பட்டு 1982-ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வெளிவந்த ‘ஜீவா என்றொரு மானுடன்’ என்ற நூலில், “1954-இல் கேரளம் இரண்டாவது பொதுத் தேர்தலைச் சந்தித்து. ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்றகோஷத்தை முன்வைத்து திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தமிழர் வாழும் பகுதிகளில் போட்டியிட்டு பரிபூரண வெற்றி அடைந்தது. அச்சமயத்தில் மத்திய அரசு மாநில சீரமைப்புக் கமிஷனை தெற்கே அனுப்பியது. திருவாங்கூர் தமிழ்ப் பகுதியைக் கேரளத்தில் இருந்து பிரித்து ஐக்கிய தமிழகம் உருவாக்க வேண்டுமென எங்கும் போராட்டம் வெடித்தது. திருவாங்கூர் முதலமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளை போலீசைக் கொண்டு போராட்டக்காரர்களைத் தாக்கினார். தேவி குளத்தில் கொடூரமான அடக்குமுறை தாண்டவம் ஆடியது. இதை எதிர்த்து 1954 ஜூன் 30இல் ‘தேவிகுளம் தினம்’ அனுஷ்டிக்க முடிவு செய்யப்பட்டது. அப்போதைய திருவாங்கூர் கொச்சி முதலமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளை 144 தடை உத்தரவைப் பிறப்பித்தார். ஆனாலும் போராட்டம் வேகம் பெற்றது. போராட்டத்திற்கு ஆதரவாக தேவி குளத்துக்குப் போன நேசமணி, சிதம்பரநாதன், ரசாக் ஆகிய தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதனால் போராட்டம் நாஞ்சில் நாட்டிலும் கொழுந்து விட்டு எரிந்தது.

1954 ஆகஸ்ட் 11-ஆம் தேதி விடுதலை தினமாக தமிழ்ப்பகுதி எங்கிலும் கொண்டாடப்பட்டது. இந்த கொண்டாட்ட போராட்டத்தை பட்டம் தாணுப் பிள்ளையின் அரசு துப்பாக்கி முனையில் சந்தித்தது. புதுக்கடை, தொடுவெட்டி ஆகிய இடங்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான பேர் படுகாயம் அடைந்தனர். ஆகஸ்ட் போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுமையாகப் பங்கெடுத்தது.

**“பீர்மேடு,தேவிகுளம் முதலியவைகளை நம் ராஜ்யத்துடன் சேர வேண்டும் என்பது அவருடைய கருத்தா, அல்லது அவைகளைத் திருவாங்கூருடன் (கேரளத்துடன்) சேர்க்க வேண்டும் என்பது அவருடைய கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன். அந்த அபிப்ராயத்தை தெரிவித்தால் அதன்மேல் நான் பேசும்போது பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்”**

அன்று மாலையில் ஜீவா போராட்டத்தை ஆதரித்து தெரிசனங்கோப்பில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசினார். கூட்ட முடிவில் ஜீவாவைக் கைது செய்ய போலீசார் முயன்றபோது, அவர் தப்பி கல்லும் முள்ளும் நிறைந்த கடுக்கரை மலையைத் தாண்டி வள்ளியூருக்குப் போய்விட்டார். களைப்பு மிகுதியால் ஒரு கடை திண்ணையில் படுத்து தூங்கிவிட்டார். மறுநாள் காலையில் தற்செயலாக அவரைச் சந்தித்து அதிசயத்த தோழர்களிடம், ‘கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்; பட்டத்தை (கேரள முதல்வர்) இங்கிருந்து கொண்டே பிய்த்து எறிவோம்” என்றார். ஆகஸ்ட் போராட்டம்தான் 1956-இல் குமரி மாவட்டமாக பழுத்துக் கனிந்து நமக்குக் கிடைத்தது” என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், “தேவிகுளம், பீர்மேடு, சிற்றூர் (சித்தூர்),நெய்யாற்றின் கரை, செங்கோட்டையின் மேல்பாகம் ஆகியவை கேரளத்துக்கே உரியன என்ற நால்வர் கமிட்டியின் தீர்ப்பை எதிர்த்து பிப்ரவரி 2இல் தமிழகமெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் ஜீவா முன் நின்றார். சென்னையில் நடந்த கூட்டத்தைக் கலைக்க போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். ஜீவாவும், எம்.ஆர்.வெங்கட்ராமனும் தடியடிப் பிரயோகத்திற்கு ஆளாகிப் பலத்த காயமடைந்தனர்” என்றெல்லாம் கூறுகிறது பொன்னீலனின் ‘ஜீவா என்றொரு மானுடன்’ நூல்.

“இரண்டாவதாக தேவிகுளம் பீர்மேடு சர்வ கட்சி அணிவகுப்பு 1956 ஜனவரி முதல் பிப்ரவரி இறுதி வரை நடைபெற்றது. அந்த அமைப்பின் செயலாளர்களில் ஒருவராக ஜீவா தீவிரப் பங்காற்றினார்” என்கிறது தோழர் கே.பாலதண்டாயுத்த்தின் ‘ஜீவா வாழ்க்கை வரலாறு’. இரண்டில் எது உண்மையாக இருக்கும்? இது நமக்குள் எழும் கேள்வி.

### உண்மை என்ன?

மொழி வழி மாநிலங்கள் உருவான காலத்தில் வட எல்லையிலும் சென்னை குறித்தும், தெற்கெல்லைப் போராட்டம் குறித்தும், பதிவாகியுள்ள நிகழ்வுகளின் உண்மைத்தன்மை குறித்து திறனாய்வு செய்வோம். ஜீவாவின் மீதும், அவருடைய எழுத்துக்களின் மீதும் பற்றும் மதிப்பும் கொண்டு கொண்டவரும், பாரதியை போற்றுவோரும் ஆன ஜீவபாரதி அவர்கள் 56 ஆண்டுகள் வாழ்ந்த ஜீவாவின் படைப்புகளையும், அவரைப் பற்றிய நூல்களாகவும் மொத்தம் 56 வெளியிட முனைந்து வெளியிடப்பட்ட 5ஆவது நூல் என்ற பதிப்புரையுடன் 2012 பிப்ரவரியில் வெளியாகி இருக்கும் ‘சட்டப்பேரவையில் ஜீவா’ என்ற தொகுப்பின் 36-ஆம் கட்டுரையாக ‘எல்லைப் பிரச்சினைகள் தீர ஏற்ற வழி’ என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. தலைப்பின் கீழே அடைப்புக்குறிக்குள் ‘மாநில சீரமைப்புக் குழுவின் சிபாரிசுகளின் பெயரில் நடந்த விவாதத்தின் போது 1955 நவம்பர் 21-இல் ஜீவா பேசியது’ என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் சரியாகச் சொன்னால் அந்த உரை தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற சட்டம் முன்வரைவின் (மசோதாவின்) மீது நடந்த விவாதத்தில் ஜீவா ஆற்றிய உரையே!

அவ்வுரையில், “கம்பம், கூடலூர், வண்டிப்பெரியாறு ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டோடு இருந்தால் அவற்றிலிருந்து வரும் தண்ணீர் நமக்குக் கிடைக்கும்” என்று விவாதத்தில் அமைச்சர் சி சுப்பிரமணியம் கூறியதற்கு, ஜீவா “தண்ணீரின் உற்பத்தி ஸ்தானம் அங்கே இருந்தாலும் இங்கே உபயோகப்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது காவிரி தண்ணீர் கூர்க்க நாட்டில் இருந்து செல்வதால், அங்கே அந்த நதி தேக்கி விட வேண்டும் என்று சொன்னால் அதில் நமக்கு பிரயோஜனம் இல்லை,” என்று கூறுகிறார். உடனே அமைச்சர் “அந்த பெரியாறுத் தண்ணீரை அங்கே (கேரளத்தில்) உபயோகிப்பதற்கு இடமில்லை; அது நேரே கடலில் போய் விழுகிறது. அங்கே உபயோகிப்பதற்கு நிலம் இருந்தால் அப்போதுதான் அதைப் பற்றி பேச முடியும்” என்று பதிலளிக்கிறார்.

அதற்கு ஜீவா, “இன்றைக்கு இந்தக் கமிஷன் ரிப்போர்ட் நமக்கு பிரதிகூலமாக (பாதகமாக) இருக்கிறது. தமிழர்கள் நிறைய இருக்கக் கூடிய பிரதேசம் நமக்கு கிடைக்க முடியாதபடி இருக்கிறது. அதைப் பார்க்கும் போது இந்த ராஜ்யத்தில் இருக்கும் மக்கள் (தமிழர்கள்) பயப்படுகிறார்கள். இருந்தாலும் இந்திய யூனியனிலேயே நாம் இருப்பதால் எங்கிருந்தாலும் கவலை இல்லை என்று சொல்லப்படுகிறது” என்றார்.

### முன்னுக்குப் பின் முரண்!

மேலும், “தண்ணீர் விஷயம் பொருத்தவரையில், மின்சார விஷயம் பொருத்தவரையில், நீர்ப்பாசன விஷயம் பொருத்தவரையில் உள்ள எல்லா பிரச்சனைகளிலும் எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளைத் தீர்ப்பதற்கு மக்கள் எல்லோரும் சகோதர மனப்பான்மையில் விவாதித்து அதற்கு வேண்டிய பரிகாரம் தேட வேண்டும். அதற்கு உதவி செய்வதற்கு அங்குள்ள (கேரளாவில் உள்ள) மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்குத் தகுந்த முறையில் பேச்சு இருக்க வேண்டும். ஜனநாயக முறையில் அவைகளைத் தீர்க்க வேண்டும்; அப்படி தீர்க்கவும் முடியும்; அப்படித் தீர்ப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இது என்னுடைய கருத்து. இவைகளில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் சமாதான முறையில் அவைகளைத் தீர்க்க வேண்டும் என்பது என் கருத்து.” என்று பேசுகிறார் ஜீவா.

அதற்கு அவை முன்னவரான அமைச்சர் சி சுப்பிரமணியம், “இதுவரையில் கனம் ஜீவானந்தம் பேசியதைக் கேட்டு வந்தேன். அவர் பேசியதில் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதாகத் தெரிகிறது. மணியக்காரர் உடைய மாடு முன்னால் பார்த்தால் ஒரு மாதிரியும், பின்னால் பார்த்தால் ஒரு மாதிரியாக இருப்பதாகச் சொல்லுவார்களே (ஒரே சிரிப்பு) அதைப்போல இருக்கிறது. பீர்மேடு, தேவிகுளம் முதலியவைகளை நம் ராஜ்யத்துடன் சேர வேண்டும் என்பது அவருடைய கருத்தா, அல்லது அவைகளைத் திருவாங்கூருடன் (கேரளத்துடன்) சேர்க்க வேண்டும் என்பது அவருடைய கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன். அந்த அபிப்ராயத்தை தெரிவித்தால் அதன்மேல் நான் பேசும்போது பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்” என்கிறார்.

அதற்குப் பதிலாக ஜீவா “என்னுடையப் பேச்சைக் கவனித்தால் ஒரு முடிவுக்கு வர முடியும். அவைகள் நம்முடன் இருக்க வேண்டுமா? அல்லது திருவாங்கூருக்குப் போக வேண்டுமா? என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன் சகோதர அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து இந்த பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழி செய்ய வேண்டும். அங்குள்ள பிரச்சினை ரொம்பவும் சிக்கலாக இருக்கிறது. சிரமம் இல்லாமல் மக்களுடைய அபிப்ராயத்தைக் கேட்டு இந்தச் சிக்கலைத் தீர்க்கவேண்டும்.

இரண்டு பேருடைய கருத்தையும் கேட்டால் இதை சுகமாக முடிக்க முடியும் என்பது கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து. என்னுடைய கருத்தும் கூட” என்று தேவிகுளம் பீர்மேடு சிக்கல்களுக்கு தன் கருத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தையும் தங்கள் நிலைப்பாட்டையும் ‘மிக மிகத் தெளிவாக’ குழப்பி உரையை முடித்துள்ளார். இதுவே ஜீவா தெற்கெல்லைப் போராட்டத்தில் பங்கெடுத்த பெரும் சிறப்பு. தேவிகுளம், பீர்மேடு தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும் என்று அரசால் ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்ட 21.11.1995 அன்று ஜீவா ஆற்றிய உரையின் பகுதிகளே மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை.

24.11.1955 இல் விவாதித்து முடிந்த பின்னால் நடந்த வாக்கெடுப்பில் தீர்மானத்திற்கு ஆதரவாக 122 வாக்குகளும், அதற்கு எதிராக 18 வாக்குகளும் கிடைத்ததால் தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் ஜீவா, பி.ராமமூர்த்தி, எம். கல்யாணசுந்தரம் உள்ளிட்ட தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் நடுநிலை வகிப்பதாகக் கூறி வாக்களிக்கவில்லை. இந்தியா ஈழச்சிக்கல் குறித்த தீர்மானங்களுக்கு வாக்கெடுப்புகள் நடந்தபோதெல்லாம் நடுநிலைமை வகித்து வாக்களிக்காததைப் போல. **(தொடரும்).**

**பெங்களூர் கழகத் தோழர் ந.சித்தார்த் தனது 60வது பிறந்தநாளை முன்னிட்டு புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு வளர்ச்சி நிதியாக ரூ.5000 நன்கொடை வழங்கியுள்ளார்.**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பத்ரி வீழ்த்தப்படவில்லை, விதையாக்கப்பட்டார்!

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். கழகத் தோழர் பத்ரி நாரயாணன் பற்றிய கடந்த இதழின் தொடர்ச்சி...**

திருவல்லிக்கேணி ஐஸ் அவுஸ் பகுதியில், 1992-ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை மசூதி வழியாக நடத்தி, கலவரத்தில் முடிக்க முயன்றனர் சிலர். அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது வி.எம். தெரு. அடுத்த ஆண்டில் வி.எம்.தெருவுக்குள்ளும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை நடத்த முயன்றார் ராமகோபாலன். அந்த முயற்சியை முறியடித்து, கலவர நோக்கத்தைத் தடுத்ததுடன், ஐஸ் அவுஸ் பகுதியில் விநாயகர் சிலை ஊர்வலங்களுக்கு எதிர்ப்பாக பெரியார் கைத்தடி ஊர்வலத்தை நடத்தி, சமூகப் பதற்றத்தை தணித்தார் பத்ரி.

அதேபோல, 2001-இல் அமெரிக்க இரட்டை கோபுரத் தாக்குதலின்போது இஸ்லாமியர்களை பயங்கரவாதிகளாக சித்தரிக்க முயன்றன மேற்குலக நாடுகள். மேடை ஏறி பேசவே கூச்சப்படும் குணம் கொண்ட பத்ரி, இஸ்லாமிய அமைப்புகளை அழைத்துவந்து மேடை அமைத்துக்கொடுத்து, மேற்குலக நாடுகளின் சூழ்ச்சிகளை, எளிய மக்களும் உணரச் செய்தார். சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று, உயிர்நீத்த திருவையாறு மஜீத்தின் நினைவாக தனது மகனுக்கு 'மஜீத்' என்றே பெயர் சூட்டினார்.

பத்ரியின் நல்லிணக்கப்போக்கு மதத்தைக் கடந்தது மட்டுமல்ல, அரசியலையும் கடந்தது. வி.எம்.தெருவில் ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி 12-ஆம் நாள் பொங்கல் விழாவை, பாகுபாடு இல்லாமல் அனைத்துக் கட்சியினரையும் இணைத்து நடத்தும் வழக்கத்தை உருவாக்கினார். பத்ரியின் இத்தகைய ஓயாத களப்பணிகள் நூற்றுக்கணக்கான இளைஞர்களை பெரியாரியப் பாதை நோக்கி இழுத்தது. அவர்களையும் கருப்புச்சட்டை அணியச் செய்தது. மதத்தில் இருந்தும் ஜாதியில் இருந்தும் அவர்களை விடுவிக்கச் செய்தது. இச்செயல்களை விரும்பாதவர்களின் கொடூர சிந்தனைக்கு இரையாக்கப்பட்டார் பத்ரி. ஆனால், பத்ரியின் மறைவு வீழ்ச்சியாக அல்லாமல், விதையானது.

> **"வி.எம்.தெருவில் சமூக விரோதச் செயல் பாடுகளுக்கு முடிவுகட்டி நூற்றுக்கணக்கான இளைஞர்களை, திராவிட இயக்க கருத்தியல்வாதிகளாக வளர்த்தெடுத்த ஆளுமை பத்ரி நாராயணன். அவரை அழித்துவிட்டால், சமூக விரோதிகள் தங்கள் விருப்பம் போல செயல்படலாம் என்று கருதினர். ஆனால், 20 ஆண்டுகள் கடந்த பின்னும் பத்ரி உருவாக்கிய கொள்கைப்படை இன்றும் வீரியமாக இருக்கிறது. அவரை வீழ்த்தியவர்கள்தான் எவரும் இல்லை"**
> **-இரா. உமாபதி (திவிக)**

பத்ரி நாராயணனோடு அப்பகுதியில், திராவிட இயக்கத்தின் கதை முடிவுக்கு வந்துவிடும் என்று கருதியவர்களின் எண்ணம் பொய்த்துப்போனது. பத்ரி நிறுவிய பெரியார் சிலைக்கு அருகிலேயே, பத்ரி நாராயணன் பெயரில் 2006-இல் படிப்பகம் உருவானது. அவருடைய மறைவுக்குப் பிறகு ஒருவர்கூட தங்கள் கருப்புச்சட்டையைக் கழற்றி விடவில்லை. மாறாக, அதன்பிறகும் நூற்றுக்கணக்கானோர் கருப்புச்சட்டை அணிந்தனர்.

அவர் தொடங்கிவைத்த பொங்கல் விழா கால் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. 2023-இல் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொள்ளும் அளவுக்கு மாபெரும் மக்கள் திருவிழாவாக பொங்கல் கொண்டாட்டம் அங்கு உருவெடுத்துள்ளது.

பத்ரி நாராயணன் வாழ்ந்த காலத்தில் செய்த பணிகள் எதுவும் நின்றுவிடவில்லை. பெரியார் பிறந்த நாள் விழாக்கள், ஜாதி ஒழிப்புப் பரப்புரை, திராவிட இயக்கக் கொள்கைப் பிரச்சாரங்கள் என பத்ரியின் காலத்தை விட வேகமாக இயங்கும் இளைஞர் படை, அதன் பின்னால் வி.எம்.தெருவில் உருவானது. பத்ரியின் வாழ்வும், பணிகளும் அவர்களுக்கு வழிகாட்டியானது.

## பொள்ளாச்சி, மேட்டூரில் ஆர்ப்பாட்டம்!




**பொள்ளாச்சி:** உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதனை பதவி நீக்கம் செய் எனும் முழக்கத்தோடு 11.12.25 அன்று மாலை பொள்ளாச்சி திருவள்ளுவர் சிலை அருகில் சனநாயகக் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வே.வெள்ளிங்கிரி (திவிக) தலைமையில் நடைபெற்றது. தமிழ்க்குமரன் (ஜெய் பீம் பொதுநல அறக்கட்டளை) தொடக்க உரையாற்றினார். கோபாலகிருஷ்ணன் (தமிழ்ப்புலிகள் கட்சி), மாரிமுத்து (தி.க.), ராஜ்குமார் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை), க.மாரிமுத்து (மக்கள் விடுதலை முன்னணி), மணிமாறன் (திமுக), மாறன் (மக்கள் அதிகார கழகம்), முகமது யாசின் (எஸ்.டி.பி.அய்.), மனோகரன் (சிபிஎம்), பிரபாகரன் (மே 17 இயக்கம்), வழக்கறிஞர்கள் சேதுபதி (தமிழ்நாடு தன்னுரிமை இயக்கம்), சூரியகுமார் (நீலம் பண்பாட்டு மையம்), மதி.அம்பேத்கர் (விசிக) ஆகியோர் கண்டனவுரையாற்றினார்கள்.

### மேட்டூரில் கண்டனப் பொதுக்கூட்டம்!

**மேட்டூர்:** மேட்டூர் நகர கழகத்தின் சார்பாக மதுரை திருப்பரங்குன்ற உச்சி பிள்ளையார் கோவில் தீப வழக்கில் தமிழ்நாட்டில் பதட்டத்தை உண்டாக்க ஒருவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியதை எதிர்த்து கண்டனப் பொதுக்கூட்டம் டிச-13,2025 சனிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் மேட்டூர் சதுரங்காடியில் செ. மார்டின் (மேட்டூர் நகர தலைவர்) தலைமையில் நடைப்பெற்றது. சி. கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்) முன்னிலை வகித்தார். பாடகர் கோவன் பங்கேற்ற ம.க.இ.க இசைக்குழுவின் சார்பாக கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. சி. குமரப்பா (மேட்டூர் நகர செயலாளர்) வரவேற்புரையாற்றினார். காவை ஈஸ்வரன் (கழகத் தலைமைக் குழு உறுப்பினர்), பிரபாகரன் (சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர்) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

U2Brutus மைனர், பார்ப்பன அடிமையாக திகழும் சீமான் பாசிசம்தான் எங்களுக்கு முதல் எதிரி என சொல்லித் திரியும் அரசியலை திரைப்படமாக நினைத்து வசனங்களாக பேசியும் தமிழ்நாட்டில் சமுகநீதிக்கு பிரச்சனை வருகின்ற பொழுது தலைமறைவாகும் தமிழக வெற்றிக் கழக நடிகர் விஜய் அவர்களை பற்றியும் அவர்களின் நோக்கங்கள் இளைஞர்களுக்கு புரியும் வகையில் எடுத்துரைத்து, நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதனை கண்டித்தும், பார்ப்பனர்களை தவிர அனைவரும் சமம் எனக் கூறி கண்டன உரையாற்றினர்.




*TRIBES கரிகாலன், பாஜக மற்றும் இந்து அமைப்பினர் தமிழ்நாட்டில் நடத்திய ஜாதி, மத பிரச்சனைகள் நடந்த இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்து சேகரித்த புகைப்படங்களை காட்டி அவர்களின் நோக்கங்களை ஆதாரபூர்வமாக விளக்கியும் பா.ஜ.க, இந்து அமைப்பினர் இனி வரும் காலங்களில் நிகழ்த்த நினைக்கும் பிரச்சனைகள் பற்றியும், இவர்களுக்கு ஆதரவாகச் செயல்படும் பார்ப்பன நீதிபதிகளான ஜி.ஆர் சுவாமிநாதன் போன்றோரைக் கண்டித்தும், பார்ப்பன கடப்பாரையால் அரசியலமைப்புச் சட்டத்தை இடிக்க நினைப்பதை நாம் தடுத்து நிறுத்தி அரசியலமைப்பைப் பாதுகாக்க வேண்டும் எனக் கூறி கண்டன உரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திருப்பரங்குன்றத்தில் கலவரம் செய்ய துடித்த கயவர்களை சட்டக் கரங்களைக் கொண்டு அடக்கிய தமிழ்நாடு அரசை பாராட்டியும், நீதித்துறைக்கு பொருத்தம் இல்லாமல் மாரியம்மன் கோவில் பூசாரிபோல் நெற்றியில் பட்டையும், கைகளில் கயிறுகளைக் கட்டித்திரியும் சட்டத்திற்கு பொருந்தாத ஜி.ஆர்.சுவாமிநாதன் பதவி விலகிவிட வேண்டும் அப்படி விலகுகிற அளவிற்கு அவர் மானம், மரியாதை உள்ளவர் இல்லை அவரை நீக்குவதற்கான முயற்சியை நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார்கள். அவர் நீக்கப்படுகிறாரோ இல்லையோ இதைப் பற்றி நாடாளுமன்றம் விவாதிக்கும்; வாரலாறு பேசும்; எனக்கூறி கண்டன உரையை நிறைவு செய்தார். மீ. அம்ஜத்கான் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டக் கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். 100-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## தோழர் அஞ்சலையின் முதலாமாண்டு நினைவேந்தல்!



வடசென்னை கழகத் தோழர் அருள்தாஸின் தாயார் அஞ்சலை (என்கிற) அன்னை மரி முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்வு டிச-11, 2025 மாலை 6 மணிக்கு கே.பி.பார்க் இல்லத்தில் நடைபெற்றது. அருள்தாஸ் புரட்சிப் பெரியார் முழக்கம் இதழுக்கு 10 சந்தாக்களை வழங்கினார். நிகழ்வில், இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர் ), மாவட்டத் தலைவர்கள் மா. வேழ வேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, மற்றும் ராஜன், தினகரன், விஜயன், அசோக் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

## சிற்றுண்டி கடைத் திறப்பு விழா!



கழக ஆதரவாளரான தோழர் ரஞ்சித் அவர்களின் சிற்றுண்டி கடை **(SNACKIFY),** இராயப்பேட்டை அஜந்தா பேருந்து நிலையம் அருகில் டிசம்பர்-14, 2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் ப. அருண் (இளைஞரணி அமைப்பாளர்) தலைமையில் கடை திறப்பு விழா நடைபெற்றது.

இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) சிற்றுண்டி கடையைத் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினராக ஆர்.என்.துரை (திமுக தென்சென்னை மேற்கு மாவட்டத் துணைச் செயலாளர்) கலந்து கொண்டார். திருவல்லிக்கேணி பகுதிக் கழகத் தோழர்கள் மற்றும் ரஞ்சித் குடும்பத்தினர், நண்பர்கள் உடனிருந்தனர். புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.1000 மாவட்டச் செயலாளரிடம் வழங்கினார்.

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

**ஆண்டு சந்தா** ரூ.300/- | **ஐந்தாண்டு சந்தா** ரூ.1500/-

தொடர்புக்கு: 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை 600096. | பேச: 63697 76351

முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 19, 2025

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor: K. Rajendran